மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்
පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව, උතුරු පළාත්
PROVINCIAL DEPARTMENT OF EDUCATION, NORTHERN PROVINCE

மருதனார்மடம், சுன்னாகம் | මරුතනාර්මඩම්, චුන්නාකම් | Maruthanarmadam, Chunnakam

☎-0212242800 Adm- 021 3215545 fax-0212241383.
✉: educationnorthern@yahoo.com

எனது இலக்கம் / මගේ අංකය / My No: NP/20/GA/ISA/13
உமது இலக்கம் / ඔබේ අංකය / Your No:
2016.05.24

## ஆசிரிய ஆலோசகர் பதவி வெற்றிடங்களை நிரப்புதல் - 2016

வடமாகாணக் கல்வி வலயங்களில் நிலவும் பாடரீதியான ஆசிரிய ஆலோசகர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக வடமாகாண அரச பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1) பொதுவான தகைமைகளும் ஏனைய நிபந்தனைகளும்**

1.1 அரச பாடசாலை ஒன்றில் ஆசிரியராக இருப்பவர்கள் வடமாகாணத்தில் வெற்றிடமுள்ள வலயங்களுக்கு விண்ணப்பிக்க முடியும். ஆயினும் வெற்றிடமுள்ள வலயத்திற்குரிய ஆசிரிய ஆலோசகர் அவ்வலயத்திலுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து தெரிவு செய்யப்படாதவிடத்து ஏனைய வலயத்திலிருந்து விண்ணப்பிப்போர் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுவர்.

1.2 விண்ணப்பதாரி 10.06.2016இல் 50(ஐம்பது) வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

1.3 இலங்கை ஆசிரிய சேவையில் 1ஆம் வகுப்பு அல்லது வகுப்பு 2 தரம் 1 ஆசிரியராக இருத்தல் வேண்டும். (1885/38 இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட புதிய ஆசிரிய பிரமாணக் குறிப்பிற்கமைவாக 2016.05.30 ஆந் திகதிக்கு முன் பதவியுயர்வுக்கு தகுதியான ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.)

1.4 அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து விண்ணப்பிக்கும் பாடத்தினை ஒரு பாடமாக கொண்டு பட்டம் ஒன்று பெற்றிருத்தல் வேண்டும்.

1.5 பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

1.6 கல்வியியல் பட்டப்பின் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.(கல்வியியல் முதுமாணி)

1.7 ஆசிரிய சேவையில் உரிய பாடத்தில் கற்பித்தல் தொடர்பாக 10 (பத்து) வருட அனுபவம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

**2) விசேட கல்விக்கு விண்ணப்பிப்போருக்கான தகமைகள்:**

விசேட கல்வியில் 6 வருட அனுபவம், விசேட கல்வி தொடர்பாக 6 மாத காலத்திற்கு மேலான டிப்ளோமா கற்கைநெறி பயின்றிருத்தல், வேண்டும். அத்துடன் இப்பாடநெறிக்கு இ.ஆ.சே 2-II ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

**3) ஆரம்பக் கல்விக்கு விண்ணப்பிப்போருக்கான தகமைகள்:**

ஆரம்பக்கல்விக்கு 10 வருடகால ஆரம்பக்கல்வி வகுப்புக்களில் கற்பித்தல் அனுபவம், ஆசிரியர் பயிற்சியும்கல்வித்தகைமையாக கொள்ளப்படும்

**4) முறைசாராக் கல்விக்கு விண்ணப்பிப்போருக்கான தகமைகள்:**

முறைசாராக் கல்விக்கு தொழில்நுட்ப பாடத்தில் பயிற்சி அல்லது பட்டம் பெற்றிருப்பதுடன் 6 வருட கற்பித்தல் அனுபவம் இருத்தல் வேண்டும்.

**5) மனைப்பொருளியல், உடற்கல்விக்கு விண்ணப்பிப்போருக்கான தகமைகள்:**

மனைப்பொருளியல், உடற்கல்வி ஆகிய பாடங்களுக்கு குறித்த பாடத்தில் பயிற்சி அல்லது பட்டம் பெற்றிருப்பதுடன் 6 வருட கற்பித்தல் அனுபவம் இருத்தல் வேண்டும். அத்துடன் இப்பாடநெறிக்கு இ.ஆ.சே 2-II ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

6) **தகவல் தொழில் நுட்ப பாடத்திற்கு விண்ணப்பிப்போருக்கான தகமை:**

தகவல் தொழில் நுட்பம் மற்றும் கணணிவள நிலைய போதனாசிரியர் பதவிக்கு தகவல் தொழில் நுட்ப பாடத்தில் பட்டம், மற்றும் குறைந்தது 6 வருட கற்பித்தல் அனுபவத்துடன் இ.ஆ.சே 2.11 தரமுடைய ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

7) ஆசிரிய ஆலோசகர் தெரிவுகள் எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சை அடிப்படையில் இடம்பெறும்.
விண்ணப்பப் படிவங்களை வலயக்கல்வி அலுவலகங்களில் பெற்று விண்ணப்பிக்க முடியும். npedu.sch.lk என்னும் இணையதள முகவரியிலும் பார்வையிடலாம்.

8) வலயக் கல்விப் பணிப்பாளரினால் சுயவிபரக் கோவையுடன் செவ்வை பார்த்து, சிபார்சு செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் பட்டியற்படுத்தப்பட்டு 2016.06.06ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

9) நியமனங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் செயலாளரினாலேயே மேற்கொள்ளப்படும்.

10) வலய, பாடரீதியாக ஆசிரிய ஆலோசகர் பதவி வெற்றிட விவரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது

**குறிப்பு: மன்னார், மடு, துணுக்காய், வவுனியா வடக்கு, கிளிநொச்சி ஆகிய வலயங்களுக்கு இ.ஆ.சே 1, 2.1 ஆகிய சேவைகளை சேர்ந்தோர் விண்ணப்பிக்காத நிலையில் இ.ஆ.சே 2.11 தரத்திலுள்ளோரின் விண்ணப்பங்கள் சேர்த்துக்கொள்ளப்படும்.**

செ.உதயகுமார்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வடமாகாணம்.